Scan the code using 'e Courts Services' mobile application download from play store

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்.**

முன்னிலை : **திரு.சி.ஸ்ரீதர், பிஎஸ்ஸி., பி.எல்.,**
(JO Code : TN01286)
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருப்பூர்.

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழன்கிழமை**
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் மாசி திங்கள் 28 ம் நாள்

**அசல் வழக்கு எண்.193/2021**
**[ CNR No. TNTI180007972021 ]**

ஆர்.கார்த்திகா .. வாதி

/ எதிர் /

1. ஏ.ராமசாமி
2. மைனர் ஆர்.பிரணிதா,
அவருக்கு பாதுகாப்பாளர் தந்தை ஏ.ராமசாமி .. பிரதிவாதிகள்

**இ.ம.எண்.2/2023 ல் 21.02.2023 ம் தேதியிட்ட உத்தரவுபடி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டது.**

இந்த வழக்கானது 19.02.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.M.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் திரு.D.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ..

## தீர்ப்புரை

வாதியின் தரப்பில் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை 3 பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கீடு செய்யுமாறு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :–

1ம் பிரதிவாதி, வாதிக்கு தந்தை என்றும், வாதியின் தாயார் மற்றும் 1ம் பிரதிவாதி விவாகரத்து பெற்று தனித்தனியாக வாழ்ந்து வருவதாகவும், 1ம் பிரதிவாதி வேறு பெண்ணை 2வது திருமணம் செய்து அவருக்கு பிறந்தவர்தான் 2ம் பிரதிவாதி என்று குறிப்பிட்டுள்ளார். வாதி தற்பொழுது தனது தாயாரின் பாதுகாப்பில் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருவதாகவும், வழக்கு சொத்து வாதியின் கொள்ளு தாத்தாவிற்கு 03.05.1949ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி பாத்தியப்பட்டது என்றும், வாதியின் தாத்தாவிற்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்தினை அவர் தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு 28.06.2019ம் தேதியில் எவ்வித பிரதிபலனுமின்றி செட்டில்மெண்ட் செய்து கொடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வாதியின் தாத்தா செய்து கொடுத்த கிரைய உடன்படிக்கை, மேடோவர் மற்றும் தான செட்டில்மெண்ட் படி சொத்தை 09.03.2020ம் தேதியன்று வாதியின் பாட்டி எந்த ஒரு பிரதி பிரயோஜனமுமின்றி 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் கொடுத்து விட்டதாகவும், மேற்படி 2 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை 1ம் பிரதிவாதி எவ்வித தொகையும் கொடுக்காமல் பெற்றுள்ளதால், அது வாதிக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றும், அதனால் பிறப்பின் அடிப்படையிலேயே 1/3 பாகம் வாதிக்கு உரிமை உள்ளது என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

வாதிக்கும், அவரது தாயாருக்கும் இடையே விவாகரத்து நடைபெற்றுவிட்டது என்பது உண்மைதான் என்றும், மேற்படி விவாகரத்து வழக்கானது HMOP No.188/2004 என்ற எண்ணில் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் இந்த 1ம் பிரதிவாதி தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டதால், அதை எதிர்த்து கோவை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் CMA No.4/2009 என்ற எண்ணில் தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் படி இரு தரப்பிலும் கூட்டாக ஒரு குறிப்பாணை தாக்கல் செய்ததாகவும், அதில் வாதியின் தாயார் இந்த வாதியின் தற்போதைய வழக்கறிஞரையே மேற்படி CMA விலும் நியமித்திருந்ததாகவும், மேற்படி சமாதான முறையில் வாதியின் தாயார் வாதிக்கும் சேர்த்து ரூ.5,00,000/–த்தை வரைவோலை மூலம் பெற்றுக் கொண்டதாகவும், மேலும் மேற்படி வாதியின் தாயார் தனக்காகவும், தனது மகளான வாதிக்காகவும் எவ்வித ஜீவனாம்சத் தொகையும் கேட்கப் போவதில்லை என்றும், சொத்துக்கள் இருந்தால் அதன்மீது எந்த ஒரு உரிமையும் கோரப் போவதில்லை என்றும் தெளிவாக குறிப்பிட்ட நிலையில், அதை மறைத்து இந்த வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

4. மேலும், தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு 08.06.1965ம் தேதியிட்ட கிரைய பத்திரப்படி பாத்தியப்பட்டது என்றும், அவர் அந்த சொத்தை தனது மனைவியான கருப்பத்தாளுக்கு 03.03.2020ம் தேதியன்று செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்ததாகவும், அதற்குப் பிறகு கருப்பாத்தாள் வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து தனி

Scan the code using 'e Courts Services' mobile application download from play store

சுவாதீனம் இருந்து வந்த நிலையில், அந்த சொத்தைப் பொறுத்து வாதி எவ்வித பாகப்பிரிவினையும் கோர முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் வாதி கூட்டு சுவாதீனத்தில் இல்லாததால் 37(1) நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி, 14.07.1964 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் 2 கிரைய பத்திரம் எழுதி கொடுத்த கொண்டத்து கவுண்டர், மாரப்ப கவுண்டருக்கு 14.07.1964 ம் தேதியில் கிரையம் கொடுத்து மீண்டும் சொத்தை திரும்ப பெற்றுக் கொள்ளும் உரிமையுடன் 1ம் பிரதிவாதியின் தந்தையான ஆறுமுக கவுண்டருக்கு எழுதிக் கொடுத்ததாகவும், மேற்படி மாரப்ப கவுண்டர் சொத்தை திரும்ப பெற்றுக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தாலும், மேற்படி மாரப்ப கவுண்டர் 1ம் பிரதிவாதியின் தாயாரான கருப்பத்தாளுக்கு மேற்படி உரிமையை made over செய்து கொடுத்துவிட்டதாகவும், அதனால் 1ம் பிரதிவாதியின் தாயாரும் மேற்படி சொத்தை கிரையம் பெற உரிமை உடையவர் என்றும், ஆனால் மேற்படி 1ம் பிரதிவாதியின் தாயார் அவருக்கு ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி 1ம் பிரதிவாதிக்கு 09.03.2020 ம் தேதியன்று செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டதாகவும், அதற்கு பிறகு 1ம் பிரதிவாதி வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், ஆகவே தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதி ஆறுமுக கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதியின் தாயார் கருப்பாத்தாளுக்கு செட்டில்மெண்ட் அவர் எழுதி வைத்து மீண்டும் 1ம் பிரதிவாதியின் தாயார் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றும், ஆகவே மேற்படி சொத்தில் எந்த ஒரு பாகப்பிரிவினையும் கோர முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் மேற்படி ஆறுமுக கவுண்டரின் வாரிசுகளான மனைவி கருப்பாத்தாள் மற்றும்

மகள் ஜெயமணி ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் அவசிய தரப்பினர்களால் பாதிக்கப்பட்டது என்று வாதம் செய்யப்பட்டது. அதனால் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கோரியுள்ளார்கள்.

5. <u>அசல் வழக்கு எண்.193/2021 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள்:</u>

இந்த தாவாவில் தீர்வு காண வேண்டி வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்தும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் கீழ்க்கண்ட எழுவினாக்கள் 17.12.2021 ம் தேதியில் வனையப்பட்டன.

1) Whether the Plaintiff is entitled to the relief of Partition and Separate Possession of 1/3 share in the suit properties ?
2) Whether the Suit is bad for non-joinder of necessary party ?
3) To what other relief ?

6. வாதி தரப்பில், 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதியை பி.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

8. <u>எழுவினா எண்.2 :-</u>

**2) Whether the Suit is bad for non-joinder of necessary party ?**

வாதியின் தரப்பில் தாவா சொத்தை 3 பாகங்களாக பிரித்து அதில் வாதிக்கு ஒரு பாகத்தை ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார். மேற்படி வாதி தரப்பு வழக்கின்படி, வாதி, 1ம் பிரதிவாதியின் முதல் மனைவியின் மகள் என்றும், 2ம் பிரதிவாதி 2வது மனைவியின் மகள் என்றும், வாதியின் தாயாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட திருமணம் ரத்து செய்துவிட்டபிறகு, 2ம் பிரதிவாதியின் தாயாரை திருமணம் செய்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது குறித்து இருதரப்பிலும் எவ்வித மாறுபட்ட கருத்துக்களும் இல்லை.

**9.** இந்த நிலையில் தாவா சொத்து வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்பதால், அதில் வாதிக்கு 3ல் ஒரு பாகம் உள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டது. இது குறித்து வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் 03.05.1949ம் தேதியிட்ட பாகப்பிரிவினையின்படி, வாதியின் கொள்ளு தாத்தாவுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தை வாதியின் தாத்தா 1ம் பிரதிவாதிக்கு 28.06.2019ம் தேதியன்று எவ்வித மறுபயனும் பெற்றுக் கொள்ளாமல் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து விட்டதாகவும், அதேபோல் 09.03.2020ம் தேதியன்று வாதியின் பாட்டி எந்த ஒரு பிரயோஜனமுமின்றி 1ம் பிரதிவாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், ஆனால் அவைகளை எவ்வித மறுபயனும் இல்லாமல் 1ம் பிரதிவாதி வாங்கியதாலும், அது வாதிக்கும் பூர்வீக சொத்து என்பதால் அதில் உரிமை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

**10.** இது குறித்து பார்க்கும் பொழுது வாதியின் கொள்ளு தாத்தாவிற்கு 03.05.1949ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி சொத்துக்கள் அனைத்தும் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதை நிரூபிக்கும் வகையில், மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் எதுவும் இந்த வாதி தரப்பில் தாக்கல்

செய்யப்படவில்லை. ஆனால் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு வாதியின் தாத்தா எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், 1ம் பிரதிவாதிக்கு வாதியின் பாட்டி எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்துள்ளார். மேலும், 26.02.1976ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேற்படி வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி, ராக்கியா கவுண்டர் மகன் சாமியப்ப கவுண்டர், சுப்பராய கவுண்டர், கருப்புசாமி கவுண்டர் மகன் சின்னசாமிக்கு கார்டியனாக தாயார் சரஸ்வதி அம்மாள், கருப்புசாமி கவுண்டர் மகன் ஆறுமுகம் ஆகிய நால்வரும் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். ஆகவே மேற்படி வாதியின் தாத்தா ஆறுச்சாமி கவுண்டர் என்பவர் வா.சா.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் 4ம் தரப்பினராக உள்ளார்.

**11.** ஆனால் வாதியின் கொள்ளு தாத்தாவிற்கு 03.05.1949ம் தேதியிட்ட பாகபிரிவினை மூலம் சொத்து கிடைத்ததாக கூறப்படும் நிலையில், அதுபற்றிய விவரங்கள் எதையும் வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தில் இல்லை. ஆனால், மேற்படி வா.சா.ஆ.2ன் படி பிரிந்த சொத்துக்களில் ஆறுச்சாமி கவுண்டர் மற்றும் அவருடைய வாரிசுகள் அனைவருக்கும் சம பாகங்கள் உள்ளது. இந்த நிலையில் மேற்படி வாதியின் தாத்தாவான ஆறுச்சாமி கவுண்டருக்கு பிரிந்த பூர்வீக சொத்து 1வது அயிட்ட சொத்து என்று மட்டுமே பிரதிவாதி தரப்பில் வாதம் செய்யப்பட்டது. மேலும் அனைத்து வாரிசுகளும் தரப்பினராக சேர்க்கவில்லை என்று எதிர்வாதம் செய்துள்ள நிலையில், வாதியே தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

> **"என் பாட்டி கருப்பாத்தாள், என் பெரியப்பா கருப்புசாமி, என் அப்பா ராமசாமி, அத்தை ஜெயமணி ஆகியோர்களுக்கு தலா 90 சென்ட் உரிமை உள்ளது என்றால் சரிதான்."**

என்று ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், தாவா 1வது அட்டவணை சொத்தில் விஸ்தீரணம் 3 ஏக்கர் 60 சென்ட் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த வழக்கில் ஒரு ஏக்கர் 80 சென்டை பொறுத்துதான் 1வது அட்டவணை சொத்தை காண்பித்துள்ளார். மீண்டும் தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

**"என் அப்பாவுடன் பிறந்தவர்கள் அண்ணன் மற்றும் தங்கச்சி உள்ளார்கள். ஆனால் அவர்கள் பெயர் தெரியாது. என் பாட்டி உயிருடன் உள்ளார். பாட்டி பெயர் ஞாபகம் இல்லை."**

என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தாவா சொத்து வாதியின் கொள்ளு தாத்தாவிற்கு ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்து என்று வாதி குறிப்பிட்டு வாதம் செய்துள்ள நிலையில், அந்த சொத்துக்களை இன்னும் பாகம் பிரிக்கப்படாமல் உள்ளதால் தனது பாகப்பிரிவினை கோரியுள்ளார். மேலும் தனது தாத்தா பெயருக்கு ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தையும் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு இருக்கும் பொழுது, மேற்படி சொத்துக்களை வாதியின் தாத்தா இறந்தபிறகு வாதியின் தந்தைக்கு மட்டுமின்றி வாதியின் பாட்டி, வாதியின் பெரியப்பா மற்றும் அத்தை ஆகிய அனைவருமே வாரிசுகள் ஆவார்கள். அவர்கள் உயிருடன் இருப்பதையும் இந்த வாதியே ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு இருக்கும் பொழுது தனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று பாகப்பிரிவினை கோரும் பொழுது அனைத்து வாரிசுகளையும் சேர்க்காமல் இந்த வாதி பாகப்பிரிவினை கோரியுள்ளார். மேலும், ஒருவேளை தனது தாத்தாவின் வாரிசுகள் அனைவருக்கும் இடையே ஏற்கனவே பாகப்பிரிவினை நடந்துவிட்டதாக இந்த வாதி குறிப்பிட்டிருந்தாலும் கூட, தனது தந்தைக்கு பிரிந்த சொத்தை பொறுத்து மட்டும் தனது தந்தை மற்றும் தந்தையின் வாரிசுகளை மட்டுமே சேர்த்து பாகப்பிரிவினை கோரமுடியும்.

12. ஆனால் இவ்வாறு இந்த வழக்கில் அவ்வாறு எந்த ஒரு வாதமும் வாதி தரப்பில் வைக்கவில்லை. அவ்வாறு இருக்கும் பொழுது, இந்த வாதியையும், தந்தையின் உடன் பிறந்த சகோதர, சகோதரி மற்றும் வாதியின் பாட்டி ஆகியோர்கள் இந்த வழக்கில் பாகப்பிரிவினை தீர்மானம் செய்ய அத்தியாவசியமான தரப்பினர்கள் ஆவார்கள். அவர்களை சேர்க்காமல் இந்த வழக்கில் பாகப்பிரிவினை கோரினால் அது முழுமையானதாக இருக்காது. அது பின்னிட்டு மேலும் பல வழக்குகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். இவ்வாறு பிரதிவாதி தரப்பில் தெளிவாக அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று எதிர்வாதம் செய்தும் கூட, இந்த வாதி அவர்களை சேர்த்து வழக்கு நடத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இந்த வழக்கானது அவசிய தரப்பினர் சேர்க்காமையால் பாதிக்கப்பட்டது என்று இந்த எழுவினாவை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. <u>எழுவினா எண்.1 :–</u>

1) **Whether the Plaintiff is entitled to the relief of Partition and Separate Possession of 1/3 share in the suit properties ?**

வாதியின் தரப்பில் தாவா சொத்தானது தனது கொள்ளு தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்றும், அவருக்குப் பிறகு தனது தாத்தா 1ம் பிரதிவாதியான தனது தந்தைக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சொத்தை கொடுத்து விட்டதாகவும், ஆனால் மேற்படி சொத்தை எந்த ஒரு மறுபயனும் இல்லாமல் வாங்கியதால் அது பூர்வீக சொத்தாகவே கருதப்பட வேண்டும் என்றும், அதனால் தனக்கு 3 ல் ஒரு பாகம் உரிமை உள்ளது என்று வாதி கோரியுள்ளார்.

**14.** ஆனால் இந்த பிரதிவாதிகளின் தரப்பில் இந்த வாதியின் தாயாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்யக்கோரி இந்த 1ம் பிரதிவாதி HMOP No.188/2004 என்ற எண்ணில் தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அதை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறையீடான CMA No.4/2019 கோவை முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் சமாதானமாக முடிக்கப்பட்டதாகவும், அதன்படி வாதியின் தாயார் தனக்காகவும், வாதிக்காகவும் சேர்த்து ஜுவனாம்சமாக ரூ.5,00,000/- பெற்றுக் கொண்டதாகவும், மேலும் சொத்துக்கள் ஏதேனும் இருந்தால் அதன்மீது எவ்வித உரிமையும் கோருவதில்லை என்று வாதியின் தாயார் ஒப்புக் கொண்டதாகவும், அதனால் தற்போது வாதி தாவா சொத்தில் உரிமை கோர முடியாது என்று எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி வழக்கானது 1ம் பிரதிவாதிக்கும், அவரது மனைவியான வாதியின் தாயாருக்கும் இடையே ஏற்பட்ட விவாகரத்து வழக்கு என்றும், அதற்கும் இந்த வாதியின் சொத்துரிமைக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று வாதிடப்பட்டது.

**15.** இது சம்மந்தமாக வாதியின் தரப்பில் தெளிவான வாதியின் சொத்துரிமையில் நிரூபித்து எவ்வித நிபந்தனைகளும் மேற்படி சமாதான குறிப்பாணையில் இல்லை என்றும், அவ்வாறு இருந்தாலும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்று வாதம் செய்யப்பட்டது. இது சம்மந்தமாக பிரதிவாதி அவரது வாதத்தை நிரூபணம் செய்யும் வகையில், மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சமாதான உடன்படிக்கைக்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்து நிரூபிக்க முடியவில்லை. மேலும், 1ம் பிரதிவாதிக்கும், வாதியின் தாயாருக்கும் வழக்கு நடக்கும் சமயத்தில் வாதியானவர் இளவர் ஆவார். அவ்வாறு இருக்கும் பொழுது மேற்படி இந்து திருமண சட்டத்தின் கீழான

Scan the code using 'e Courts Services' mobile application download from play store

வழக்கில் தீர்ப்பாயமானது இந்து திருமண சட்டப்பிரிவு 27ன் படி திருமணத்தின் போது வழங்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து மட்டும் உத்தரவு பிறப்பிக்கலாம். அதேபோல் இந்து திருமண சட்டப்பிரிவு 26ன் படி குழந்தைகளின் பராமரிப்பு, கல்வி சம்மந்தமாக உத்தரவுகளை பிறப்பிக்க முடியுமே தவிர மைனர் குழந்தைகளின் சொத்துக்களை விடுதலை செய்யும் வரை பொறுத்து தீர்ப்பாணை பிறப்பிக்க இந்து திருமண சட்டத்தின் கீழான நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எவ்வாறு இருப்பினும் மேற்படி சமாதான உடன்படிக்கையில் வாதியின் தாயார் என்ன ஒப்புக் கொண்டார் என்பதை இந்த பிரதிவாதியின் தரப்பில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்து நிரூபிக்க இயலவில்லை.

**16.** மேலும், இந்த பிரதிவாதி தரப்பில் தாவா 2வது அயிட்ட சொத்தானது 1ம் பிரதிவாதியின் தந்தையும், வாதியின் தாத்தாவுமான ஆறுச்சாமிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தை அவர் 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்து அவர் மீண்டும் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டதால், அதை பொறுத்து வாதி எவ்வித பாக பிரிவினையும் கோர முடியாது என்று எதிர்வாதம் செய்யப்பட்டது. இது குறித்து மேற்படி 1ம் பிரதிவாதியின் தந்தை ஆறுமுக கவுண்டர் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் பி.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1ம் பிரதிவாதியின் தாயார் கருப்பாத்தாள் பெயரில் உள்ள மேடோவர் பத்திரத்தின் அசல் பி.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1ம் பிரதிவாதியின் தந்தை அவரது மனைவியான 1ம் பிரதிவாதியின் தாயார் கருப்பாத்தாளுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1ம்

பிரதிவாதியின் தாயார் 1ம் பிரதிவாதிக்கு அந்த சொத்தை வா.சா.ஆ.4ன் மூலம் செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

**17.** இது குறித்து வாதி தன்னுடைய குறுக்கு விசாரணையில், தாவா "ஆ" அட்டவணை சொத்து தன் தாத்தா சுயமாக கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான் என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே மேற்படி தாவா "ஆ" அட்டவணை சொத்தானது வாதியின் தாத்தாவிற்கு சுயமாக கிரையம் வாங்கிய சொத்து என்ற நிலையில், அந்த சொத்தைப் பொறுத்து இந்த வாதி எவ்வாறு பூர்வீக சொத்து என்று உரிமை கோருகிறார் என்பது பற்றி எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. அவ்வாறான நிலையில் மேற்படி 1வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு செட்டில்மெண்ட் மூலம் வாதியின் தாத்தா கொடுத்துவிட்ட நிலையில், அவர் 1ம் பிரதிவாதிக்கே அந்த சொத்தை செட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார். அவ்வாறான நிலையில் அந்த சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தாகும். ஆகவே, தாவா "ஆ" சொத்தை பொறுத்து வாதி எவ்வித பாக பிரிவினையும் கோர முடியாது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18.** மேலும் தாவா "அ" அட்டவணையில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்பதை பொறுத்து 1ம் பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி "அ" அட்டவணையில் உள்ள நத்தம் நிலத்தில் உள்ள வீடு மட்டும் 1ம் பிரதிவாதியின் தந்தை சுயமாக வீடு கட்டி அதில் பட்டா அவர் பெயரில் பெற்று அனுபவம் செய்து வந்து இந்த 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டதாகவும், மேலும் அவரது தந்தை பல கடன்களைப் பெற்று அதை தீர்க்க முடியாததால் 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரரும் கட்டியதால் அதற்கு பலனாகத்தான் செட்டில்மெண்ட்

எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் மேற்படி "அ" அட்டவணை சொத்தானது பூர்வீக சொத்து என்ற நிலையில், கர்த்தாவாக 1ம் பிரதிவாதி குடும்ப கடனுக்காக சொத்தை விற்பனை செய்யலாமே தவிர, செட்டில்மெண்ட் பத்திரம் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்க முடியாது. அவ்வாறு ஒருவேளை செட்டில்மெண்ட் கொடுக்கவேண்டுமெனில், அது Pious purpose என்ற சமய நோக்கத்திற்காக மட்டுமே கொடுக்கலாம். ஆனால் பூர்வீக சொத்தை குடும்ப கர்த்தாவானவர் அன்பு மற்றும் பாசத்திற்காக செட்டில்மெண்ட் மூலம் மற்றவர்களுக்கு கொடுக்க முடியாது.

**19.** ஆனால் எவ்வாறு இருப்பினும், மேற்படி சொத்தை பொருத்து அனைத்து தரப்பினர்களும் வாரிசாக சேர்த்தால் தான் மேற்படி சொத்தை பொறுத்து அரிதியிட்டு இந்த நீதிமன்றம் தீர்மானம் செய்ய முடியும். இது குறித்து ஏற்கனவே இந்த நீதிமன்றம் எழுவினா எண்.1ல் இந்த வழக்கில் வாதி அனைத்து தரப்பினர்களையும் தரப்பினராக சேர்க்காததால் பாதிக்கப்பட்டதாக முடிவு செய்துள்ளது. அதேபோல் தாவா "அ" அட்டவணை சொத்தின் மொத்த விஸ்தீரனமானது 3 ஏக்கர் 60 சென்ட் என்ற நிலையில் இந்த வாதி அனைத்து சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்க்காமல் அதில் பாதியை மட்டும் தனது தந்தைக்கு பிரியும் பாகம் என்று கூறி ஒரு ஏக்கர் 80 சென்ட்க்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி சொத்தில் மொத்த விஸ்தீரணமே 3 ஏக்கர் 60 சென்ட் என்ற நிலையில், 1ம் பிரதிவாதிக்கு எப்பொழுது ஒரு ஏக்கர் 80 சென்ட் பிரிக்கப்பட்டது? எதன் அடிப்படையில் பாதி சொத்தை மட்டும் பொறுத்து பாகப்பிரிவினை கோரியுள்ளார்? ஏன் 1ம் பிரதிவாதியின் சகோதர, சகோதரி மற்றும் தாயாரை தரப்பினராக சேர்க்கவில்லை? என்பதற்கு எந்தவித விளக்கங்களும் இந்த வாதியின் தரப்பில் அளிக்கப்படவில்லை. வாதி தாவா 1வது அயிட்ட

Scan the code using 'e Courts Services' mobile application download from play store

சொத்தில் பூர்வீக சொத்தில் உள்ள வீட்டைத் தவிர மற்றவற்றுக்கு பாகப்பிரிவினை கோருவதற்கான முகாந்திரங்கள் இருப்பதாக தெரிந்தாலும், அனைத்து தரப்பினர்களையும் சேர்க்காததாலும், அனைத்து சொத்துகளையும் சேர்க்காததாலும், வாதிக்கு பாகப்பிரிவினை வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் இந்த எழுவினாவைப் பொறுத்து முடிவு செய்கிறது.

**20. <u>எழுவினா எண். 3 :–</u>**

| 3) | To what other relief ? |
|---|---|

ஏற்கனவே இந்நீதிமன்றம் இரு தரப்பினருக்கும் இடையில் உள்ள பிரச்சனையை தீர்மானம் செய்யும் அளவிற்கு எழுவினா எண். 1 மற்றும் 2ல் முடிவு செய்த நிலையில் இதர பரிகாரங்கள் எதுவும் இந்த வழக்கின் சங்கதிகளைப் பொறுத்து அவசியமற்றது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**21. முடிவாக,** (1) வாதியின் வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

(2) இந்த வழக்கின் செலவுத் தொகைகளை வாதி, பிரதிவாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு பின்னர் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2026.03.12 17:47:24 +0530

**இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருப்பூர்.**

II ADJ, Tiruppur

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:–**

வா.சா.1 – திருமதி.கார்த்திகா (வாதி)

வா.சா.2 – திருமதி. சகுந்தலா

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.03.2007 | வாதியின் பிறப்பு சான்றிதழ். |
| வா.சா.ஆ.2 | 26.02.1976 | பாகபிரிவினை ஆவணம் – இணையதள நகல். |
| வா.சா.ஆ.3 | 28.06.2019 | செட்டில்மெண்ட் ஆவணம் – இணையதள நகல். |
| வா.சா.ஆ.4 | 09.03.2020 | செட்டில்மெண்ட் ஆவணம் – இணையதள நகல். |
| வா.சா.ஆ.5 | 09.04.2020 | ஆறுச்சாமியின் இறப்பு சான்றிதழ் – இணையதள நகல். |
| வா.சா.ஆ.6 | 01.10.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல். |
| வா.சா.ஆ.7 | 15.10.2020 | பிரதிவாதியின் பதில் அறிவிப்பு. |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :–**

பி.சா.1 – திரு.ராமசாமி (1ம் பிரதிவாதி)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 03.03.2020 | செட்டில்மெண்ட் ஆவணம் – இணையதள நகல். |
| பி.சா.ஆ.2 | 09.03.2020 | செட்டில்மெண்ட் ஆவணம் – இணையதள நகல். |
| பி.சா.ஆ.3 | 24.01.2025 | கந்தாய ரசீது. |
| பி.சா.ஆ.4 | வரிசைகள் | மின் கட்டண ரசீதுகள். (2 எண்ணிக்கைகள்) |
| பி.சா.ஆ.5 | வரிசைகள் | சொத்து வரி கட்டண ரசீதுகள். (3 எண்ணிக்கைகள்) |
| பி.சா.ஆ.6 | வரிசைகள் | கணினி சிட்டாக்கள். (4 எண்ணிக்கைகள்) |

Scan the code using 'e Courts Services'
mobile application download from play store

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.7 | – | கோவை 1 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் மனு – நகல். |
| பி.சா.ஆ.8 | வரிசைகள் | வங்கியில் பணம் செலுத்தியதற்கான ரசீதுகள். (4 எண்ணிக்கைகள்) |
| பி.சா.ஆ.9 | 06.10.2020 | ஆறுச்சாமியின் வாரிசு சான்றிதழ் – இணையதள நகல். |
| பி.சா.ஆ.10 | 08.06.1965 | கிரைய பத்திரம். |
| பி.சா.ஆ.11 | 22.07.1966 | மறு கிரைய உடன்படிக்கை பத்திரம், |

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2026.03.12 17:47:35 +0530

**இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருப்பூர்.**

This Judgment was uploaded in CIS on 12.03.2026 as per Circular of the Honourable High Court in R.O.C. No.83338-A/2024/F1 dated 22.07.2025.

**Fair/ Draft Judgment**
O.S.No. 193/2021
Date : 11.03.2026
II ADJ, Tiruppur